## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.124/2016

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 22 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 22.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணன் (DW-2) | வயது | : | 59/2025 |
| த/க. பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | விவசாய கூலி |
| முகவரி | | ரங்கநாதபுரம் | வட்டம் | | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்துக்கள் வாதி வசந்தாவிற்கு சொந்தமானது என்றால் ஆமாம், தற்போது தான் தெரியவந்தது. இன்னாளது வரை வாதியானவர் தாவா சொத்துக்களை பொறுத்து எந்தவித ஆவணங்களும் எங்களுக்கு ஏற்படுத்தி தரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வசந்தாவிற்கு சொந்தம் என்பது எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2025 ல் தெரிந்து கொண்டேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.6 ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றும் எனது செல்வாக்கை வைத்து பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களை தவிர தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கான எந்தவித ஆவங்களும் எங்களிடம் இல்லை என்றால் சரிதான்.

3) தாவா சொத்துக்கள் குறித்து கிரய ஒப்பந்தம் செய்ததாக சொல்லியுள்ளதால் அதற்கு முன்பு யார் பெயரில் உள்ளது என்று தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணமானது எப்போது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 19.07.2007 ல் தான் பேசி எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு பேசப்பட்டது என்றால் காலை 10 மணிக்கு பேசி 12 மணிக்கு முடிக்கப்பட்டது.

பத்திரத்தை யார் வாங்கியது என்றால் தமிழரசன் தான் பத்திரம் வாங்கி வந்தார். எத்தனை மணிக்கு வாங்கினார் என்று தெரியாது.

4) தமிழரசன் வாங்கி வந்த பத்திரத்தில் தான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை யார் டைப் செய்தது என்றால் தமிழரசன் தான் செய்தார். அந்த ஒப்பந்த பத்திரத்தில் தமிழரசன் எங்கு டைப் செய்தார் என்றால் எனது ஊரில் எழுதினார். அந்த பத்திரத்தை யார் எழுதினார் என்றால் ஒரு ஐயர் எழுதினார். அதிலுள்ள வாசகம் யார் சொல்லியது என்றால் தமிழரசன் சொல்லியது. எத்தனை பக்கம் எழுதப்பட்டது என்றால் 3 பக்கம் எழுதப்பட்டது.

5) எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். தமிழரசன் பத்திரத்தை எந்த ஊரில் வாங்கினார் என்றால் மன்னார்குடியில் வாங்கி வந்ததாக சொன்னார். எத்தனை மணிக்கு சென்று எத்தன மணிக்கு வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எத்தணை நாட்களுக்கு முன்பு வாங்கினார் என்றால் அதுப்பற்றி சொல்லவில்லை. பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் எனது பெயரில் வாங்கப்பட்டது.

6) பி.சா.ஆ.1 ஆவணமானது 16.07.2007 ல் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரம் எனது பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் பேசியது 19.07.2007 என்பதால் பத்திரமானது எனது பெயரில் 16.07.2007 ல் வாங்கியிருப்பதால் மேற்படி கிரய ஒப்பந்தமானது மோசடியாக என்னால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

7) பி.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள 3 பக்கத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா என்றால் 19.07.2007 ல் 2 பக்கமும், 3 வது பக்கம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று ஞாபகம் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்கான மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், இந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8) கிரய ஒப்பந்தம் எற்பட்டதாக சொல்லியுள்ள நான் அதன் மூல ஆவணத்தை பார்க்காமல் ஏற்படுத்தப்பட்டது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதிக்கு முழு உரிமையுள்ள சொத்துக்கள் என்றும்,

அந்த சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும்., தாவா சொத்துக்களை வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9) வாதியிடன் எந்தவித ஆவணமும் ஏற்படுத்திக் கொள்ளாமல், தாவா சொத்து குறித்து எந்தவித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. எங்களிடம் அந்த ஆவணங்களை காண்பிக்கவில்லை என்பதால் ஆட்சேபணை உள்ளது, தாவா சொத்தினை கிரயம் செய்து தரும்போது அந்த ஆவணங்களை தருவதாக சொன்னார்.

10) வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் தற்போது எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான சொத்துக்களை 2016 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி வயதானவர் என்பதை எனக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டு தாவா சொத்தினை ஆக்கிமித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.23 10:39:08 +0530

District Munsif
Mannargudi.